# பறந்து போனாயே!



இறப்பு என்பது இயன்நிலை யாயினும்,
எப்போது வந்தாலும் துன்பம் துன்பமே!
பழுப்பாய் சருகாய் பறந்து போகையில்,
பார்ப்பவர் பெரிதாய் வருந்துவதில்லை!

துளிராய், தளிராய், கொழுந்தாய் ஒருநாள்,
தொலைந்து போனாலும் துயரம் கமழும்!
இல்லறம் கூடி இலையாய் நின்று மகிழ்கையில்,
காயும் கனியாய் பிள்ளைகளோடு வாழ்கையில்,

பிணியாய் யொன்றுப் பேதமைச் செய்து,
அவனியின் வாழ்வில் அல்லல் செய்வதேனோ?
தவமாய்ப் பிறந்து வதுவைகூடி, பிள்ளையும்
பிறந்து இல்லறம் காண்கையில், பிரிக்கலாமோ?

சருகாய் நிற்கும் பெற்றவர் தமக்கு,
அருகில் நின்று ஆறுதல் சொல்லல் இயலோ!
கருகிய மனமும் காய்ந்த நிலையுமாய்ப் பெற்றோர்,
உருகியே நின்றிடப் பறந்தாயே **பாலகற்பகமே!**

கு.ப. அசோகன்,
09-03-2024